# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# வர்த்தமானப் பத்திரிகை

**_2024 ஆம் ஆண்டு யூலை மாதம் 12 ஆம் திகதிய_**
**_பகுதி II இற்குக் குறைநிரப்பி_**

_(2024.07.18 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)_

## அரசியலமைப்புக்கான இருபத்திரெண்டாம் திருத்தம்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பைத்
திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

_அதிமேதகு சனாதிபதி அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது_

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 6.00** **தபாற் செலவு : ரூபா 150.00**

_இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை_ www.documents.gov.lk _எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்._

ச.வ.-ஒ. 60/2024

## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

*சுருக்கப் பெயர்*

**1.** இச்சட்டம் அரசியலமைப்புக்கான இருபத்திரெண்டாம் திருத்தம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 83 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்*

**2.** இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 83 ஆம் உறுப்புரையானது, அதன் (ஆ) என்னும் பந்தியில், "ஆறு ஆண்டுகளுக்கு மேற்பட்ட" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஐந்து ஆண்டுகளுக்கு மேற்பட்ட" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்*

**3.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.